# GOOD INSTRUCTION.

[A reprint, with some modifications, of No. 9, of the publications of the Palamcotta Society. It was published at a time when the cholera was raging dreadfully in the district, and was designed to improve the awful visitation to the spiritual good of the inhabitants, by withdrawing their attention from superstitious vanities, and leading them to the great remedy provided in the Gospel for the malady of sin.]

# நற்புத்தி.

சனங்களே, இக்காலத்திலே உவாந்திப் பிராந்தியென்கிற பொல்லாத வியாதியினாலே சடுதியாய்ச் சாகிறவர்களில் அநேகர் பராபரனையும் இயேசுக்கிறிஸ்து இரட்சகரையும் அறியாமற் பாவத்தோடே இறந்து தங்கள் பாவங்களுக்குத் தக்க ஆக்கினையை அடைவதற்கேதுவாய்ப் போவதினாலே கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகுந்த சஞ்சலம் உண்டாயிருக்கின்றது. சனங்கள் பராபரனையும் அவருடைய திருச் சித்தத்தையும் அறிந்து அதின்படி நடந்துவருகையில் இறந்துபோனால் அவர்கள் அவரிடமாய் மோட்சத்தை அடைவார்கள். அப்படிப்பட்டவர்களைக் குறித்து நாஞ் சஞ்சலப்படவேண்டுவதில்லை. ஆதலால் எல்லாரும் அப்படியே நல்ல மரணம் அடையவும் மோட்சத்தை அனுபவிக்கவும் விரும்பி

2d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

நாங்கள் உங்களுக்குச் சில புத்திகளைப் பட்சமாய்ச் சொல்லுகிறோம் கேளுங்கள்.

நாம் எல்லாரும் பாவஞ்செய்கிறவர்களாயிருக்கிறதினாலே இம்மையில் மரணம் அடைகிறதுமல்லாமல் மறுமையிலே நரக ஆக்கினையைப் படுவதற்கும் ஏதுவாய் இருக்கிறோம். நாம் பாவத்தை விட்டுவிலகிக் கொடிதாயிருக்கிற அந்த நரக ஆக்கினைக்குத் தப்பிக்கொள்ளப் பராபரன் பூருவத்திலே பற்பல கற்பனைகளைக் கொடுத்ததுமல்லாமற் றமது பிரியமுள்ள குமாரனாகிய இயேசுநாதர் மனித அவதாரஞ் செய்து நம்முடைய ஆக்கினையைச் சுமந்துகொண்டு மிகுந்த பாடுபட்டு மரணமடைந்து நமது குற்றத்துக்கு நிவிர்த்திபண்ணவுஞ் சித்தமானார். அவர் உண்டாக்கின நிவிர்த்தியினாலே நமக்குப் பாவமன்னிப்பும் நற்குணமும் நித்திய சீவனும் வரும்படி அந்த நன்மைகளை நாம் விரும்பி நடக்கிறதற்கும் நம்மெல்லாரையும் பலவிதமாய் அழைக்கிறார்.

எப்படியெனில் அவர் நாடோறும் நமக்கு அன்ன வத்திரம் முதலிய நன்மைகளை அருளிச்செய்தும் வெயிலையும் மழையையும் உண்டாயிருக்கப்பண்ணியுந் தாம் அருளிச்செய்த வேதத்தை நமக்கு அறிவித்தும் பட்சமாய் நம்மை அழைக்கிறார். நாம் அப்படிப்பட்ட நன்மைகளைப் பெற்று அனுபவித்துங் குணப்படாமற் பின்னும் பாவத்தைச் செய்தால் அவர் யுத்தம் பஞ்சம் பெருங்

காற்றுப் பூமியதிர்த்தல் அக்கினி பயம் பெருவாரிக்காய்ச்சல் வியாதி திரவிய சேதம் முதலிய கேடுகளை வரச்செய்து நம்மை அழைக்கிறார். இது எங்கள் மேற்கொண்ட வைராக்கியத்தினாலேயல்ல கொடிதாயிருக்கிற நித்திய நரக ஆக்கினையை நாம் அடையாமல் மோட்சத்தை அடையும்படிக்கு இப்படிப்பட்ட அநித்தியமான துன்பங்களை நமக்குக் கொடுத்து நரக வேதனையை நினைப்பூட்டி நம்மைக் குணப்படுத்தும் படி நம்மேற் கொண்ட தயவினாலே நம்மை இப்படியே பராபரன் எச்சரித்துவருகிறார். அப்படி அவர் செய்கிற தயைகளை எண்ணாமல் துன்மார்க்கத்திலே நிலைப்பட்டு நடந்தோமானாற் பின்பு நம்மை நரகத்திலே தள்ளித் தண்டிப்பாரென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை இனி ஆதிமுதற்கொண்டு அவர் செய்து வருகிற சிலகாரியங்களை இதற்குத் திருட்டாந்திரமாக எடுத்துக் காட்டுவோம்.

உலகமுண்டாகி, ௲௬௱௫௬ம். வருஷத்திலே பூமியிலுள்ள மனிதர்கள் பராபரனை மறந்து காமவிகாரம் முதலிய பாவங்களையுள்ளவர்களாய் நடந்துவந்ததினாலே நோவாவையும் அவன் சமுசாரத்தையுந் தவிர மற்ற மனிதரைச் சலப்பிரளயத்தினாலே அழித்துப்போட்டார். பின்பு, ௨௲௬௭ம். வருஷத்திலே சோதோங் கொமோரா என்னும் பட்டினங்களிலுள்ள சனங்கள் மற்றப் பட்டினத்தாரைப்பார்க்கிலும் அதிக துன்மார்க்கராகிப் பராபரனுக்குப்

பயப்படாமலும் நீதிமான்கள் சொன்ன புத்
திகளைக் கேளாமலும் விபசாரங் காமவிகாரம்
விக்கிரக ஆராதனை முதலிய பாவங்களை யுள்
ளவர்களாய் நடந்து வந்த பொழுது வானத்
திலிருந்து அக்கினியையுங் கந்தகத்தையும் அ
ந்தப் பட்டினத்தின் மேல் வருஷிக்கப்பண்
ணி அவர்கள் எல்லாரையும் அழித்தார் பி
ன்பு கானான் தேசத்தார் மிகுந்த துன்மார்
க்கராயிருந்த படியினாலே ஏழுவருஷக்காலம்
பெரிய பஞ்சத்தினாலே அவர்களைத் தண்டித்
தார். யூதேயாத்தேசத்தார் துன்மார்க்கமா
ய் நடந்து வந்தபொழுது பூமி பிழக்கவுஞ் சி
லரை விழுங்கிப்போடவுஞ் செய்து வேறு சி
லருக்குள்ளே பொல்லாத பாம்புகள் வந்து
கடிக்கவும் பண்ணினார். சிலகாலத்தின் மேற்
பஞ்சமுண்டாகும்படி செய்தார். பின்னும்
அவர்கள் குணப்படாமல் விக்கிரக ஆராதனை
செய்து மற்றுந் துற்கிரியைகளை நடத்திவந்த
பொழுது அவர்களோடே மற்றத் தேசத்து
இராசாக்கள் வந்து யுத்தம்பண்ணி அவர்களு
டைய பட்டினங்களை அழிக்கவும் அவர்களை அ
ன்னிய தேசத்துக்கு அடிமைகளாகக் கொண்
டுபோகவுஞ் செய்தார்.

மேலும் அந்தச் சனங்கள் கெட்டமார்க்கங்
களிலே விழுந்து தங்களுக்குள்ளே மனித அ
வதாரம் பண்ணின இயேசுக்கிறிஸ்துவைப் ப
கைத்துத் துன்பப்படுத்திக் கொலைசெய்து
மனஸ்தாபப்படாமற் கடினமான மனசுள்ள
வர்களாய் நடந்துவந்ததினாலே உரோமான்

தேசத்தார் வந்து சிலரை வெட்டிச் சின்னபின்னமாக்கிச் சிலரைச் சிறையாகப்பிடித்துக் கொண்டுபோனதும் அவர்களூர்களையுங் கோவில்களையுஞ் சுட்டதுமன்றி மற்றவர்களை உலகத்திலெங்குஞ் சிதறவடிக்கவுஞ் செய்தார். அவர்கள் இந்நாள்வரைக்கும் அப்படித்தானே சிதறி இருக்கிறார்கள்.

இக்காலத்தில ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இராச்சியத்தாருக்குச் சம்பவிக்குங் காரியங்களும் வெகுவிதமாயிருக்கின்றன. அவர்கள் சத்திய வேதத்தின்படி நடவாமல் மென்மேலுந் துன்மார்க்கராய் நடந்துவருகிறபடியால் அங்குள்ளவர்கள் தங்கள் பொல்லாத இச்சைகளினாலே ஒருவருடைய நிலம் முதலான ஆஸ்திகளை ஒருவர் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று ஒருவரோடொருவர் யுத்தம் பண்ணி ஒருவரை யொருவர் வெட்டிப் பட்டினங் கிராமம் ஊர் முதலானவைகளைப் பாழாக்கி இவ்விதமாய் மிகுந்த ஆக்கினை அடையும்படிக்குப் பராபரன் இடங்கொடுத்து அவர்களுடைய சொந்த இச்சைகளின் பலனாலே அவர்களைத் தண்டித்து வருகிறார். இன்னம் அங்கங்கே பூமியதிர்ந்து பிளக்கப்பண்ணுகிறதினாலே அநேகமாயிரஞ் சனங்களை அழித்துப்போடுகிறார்.

அன்றியும் இந்த இந்துதேசமாகிய உங்கள் தேசத்திலேயும் துலுக்கர் முதலான வீரர்களாலும் அந்தந்த நாடுகளிலுள்ள சிற்சில இராசாக்களாலும் அடிக்கடி மிகுந்த சண்டை உ

ண்டாகவும் ஒருவரையொருவர் கொலைசெய்
யவும் குடிகளுடைய ஆஸ்திகளைக் கவர்ந்து
கொள்ளவும் அதிக அநியாயத்தினாலே மிகுந்
த துன்பம் உண்டாகவுஞ் செய்தார். இப்
பொழுதோ அவ்வகைப்பட்ட துன்பங்களில்
லாமல் நீதி சன்மார்க்கம் முதலிய நன்மைகளை
வரப்பண்ணியிருக்கிறார். அதினாலே உங்கள்
தேசத்துக்குச் சவுக்கியமுண்டாயிற்றே. நீங்
களோ அப்படிப்பட்ட உபகாரத்தை அண்டாந்
துகொண்டிருந்தும் அவருக்கு விரோதமாக
விக்கிரக ஆராதனை பொய் வஞ்சனை முதலா
ன தீமைகளைப் பெருக்கிக்கொண்டு வருகிறீர்
கள். அதினாலே பராபரன் உங்களைக் குண
மாக்கும்படிக்கு உங்கள் தேசத்திலே பஞ்சம்
மழைத் தாழ்ச்சி வியாதி முதலான தீங்குக
ளுண்டாகும்படி செய்கிறார். இவைகளையெ
ல்லாம் அறியாமல் எங்கள் அம்மனும் பரி
வாரங்களும் மற்றுந் தேவர்களும் அவைகளை
வருவிக்கிறார்கள். ஆதலால் நாங்கள் அவர்க
ளுக்கு அதிக பூசை செய்ய வேண்டுமென்
று நினைத்து அம்மன் முதலானவர்களுடைய
கோவில்களில் அதிக சாக்கிரதையாய் ஆராத
னைசெய்கிறீர்கள். நீங்கள் உற்றாராய்ந்து பா
ர்த்தால் அவர்களில் நன்மையையாவது தீமை
யாவது நடப்பிக்க வல்லமையில்லையென்று ந
ன்றாய்த்தோன்றும்.

நீங்களோ ஒன்றையுங் காணாமற் குழியிலே
விழுகிற குருடரைப்போற் கடின மனங்கொ
ண்டு உங்களுக்கு வரும் நித்திய ஆக்கினை

யைப் பாராமல் நரகத்திலே விழுவதற்கேது
வாய் நடக்கிறீர்கள். விக்கிரகாராதனையினால்
உங்கள் ஆத்துமாவுக்குப் பாவ மன்னிப்புத் தி
வ்விய அறிவு நற்குணம் மோட்சம் முதலிய
நிலையான பிரயோசனங்கள் வருகிறதில்லையே.
ஐயோ! நீங்கள் விக்கிரகாராதனைக்காகச் செ
லவழிக்கிற பணமுஞ் செய்கிற செய்கைகளு
மெல்லாம் வீணாயல்லோ இருக்கின்றது.

இனியாவது நீங்கள் நிலைபரமான நன்மை
களைத் தேடவேண்டாமா? மனந் திருப்புதல்
உங்களுக்கு வேண்டுவதில்லையா? எங்கள் முன்
னோர்களும் உங்களைப் போலத்தானே முந்தி
விக்கிரகாராதனை முதலிய துற்செய்கைகளை
யுடையவர்களாய் நிற்பந்தமான நிலைபரத்தி
லேயிருந்து பின்பு பராபரனண்டைக்கு மன
ந்திருப்பி நித்தியமான நன்மைகளைத் தேடிக்
கொண்டார்கள். அப்படியே நீங்களும் வீ
ண் விளையாட்டாகிய விக்கிரகாராதனையை வி
ட்டுப் பராபரனுக்கு ஏற்ற ஆராதனையைச்
செய்யவேண்டும். சொல்லுங்கள் என்றென்
றைக்கும் ஆக்கினைப்படுகிறதோ என்றென்
றைக்குஞ் சவுக்கியமாயிருக்கிறதோ நல்லது
நீங்கள் என்ன நம்பிக்கையைக்கொண்டு பய
மில்லாமல் இத்தனை துரிதமாய் நரகத்துக்கு
நேரே அஞ்ஞான மார்க்கத்திலே நடக்கிறீர்
கள். தீமையைவிட்டு விலகி நன்மை செய்ய
வேண்டும். இல்லாவிட்டால் தண்டிக்கப்படு
வீர்களென்று கத்தர் திருவுளம்பற்றியிருக்கிறா
ரே என்ன செய்வோம். ஒவ்வொருவனுக்கும்

அவனவன் தலையில் எழுதினபடி நடந்து தீருமென்று சொன்னாற் களவு விபசாரங் கொலை முதலான பாவங்களைச் செய்யும்படி பிரமாவே தலையின் எழுதி மனிதரைக் கள்வரும் விபசாரருங் கொலைபாதகருமாக்கினனென்றுஞ் சொல்லவேண்டுமே. அப்படியானாற் பிரமாவே எல்லாப் பாவங்களுக்குங் காரணனென்று காணவேண்டும். பின்னை அப்படிப்பட்டவனைத் தேவனென்று எப்படிச் சொல்லலாம்? மேலும் அந்தத் தலையிலெழுத்து மெய்யாய் இருந்தாற் கள்வருக்கும் மற்றப் பாவிகளுக்குஞ் செய்கையினாற் குற்றமுமில்லை. அவர்களைத் தண்டிக்கவுங்கூடாதே. நன்மை செய்கிறவர்களுக்கும் புண்ணியம் இருக்கமாட்டாது. அவர்களுக்குச் சுக துக்கத்தைக் கொடுக்கவும் நீதியைக் காணோம். ஆதலால் விதிப்படியென்று பேசுவது வீணாய் இருக்கிறதே. அல்லாமலும் விதியை நீங்கள் தானும் நம்புகிறதில்லையே. எதினாலென்றால் ஒருவன் வந்து உங்கள் பணத்தைப் பறித்துக்கொண்டு உங்கள் பெண்களோடே விபசாரஞ்செய்து பின்பு இதையெல்லாம் பிரமாவினுடைய விதியின்படி செய்தேனென்று சொன்னால் நீங்கள் அவனைத் தண்டியாமற் பொறுத்துவிடுவீர்களா? இல்லையே. பின்னை விதியை நீங்களெங்கே நம்புகிறீர்கள். நீங்கள் உங்களுடைய உபத்திரவங்களை நீக்கவும் உங்கள் சந்தோஷத்தை நிலைப்படுத்தவும் விரும்பி நடப்பதென்ன விதியின்படியாகில் எல்லாந் தன்னிலேதானாகுமே.

இன்னமும் நீங்கள் சிட்டிகரென்று சொல்
லுகிற பிரமாத் தனக்கு வருந் தீங்கை அறியா
மல் அநேக அக்கிரமங்களைச் செய்து பல ப
ல தீங்குகளை அடைந்தவன். அப்படிப்பட்ட
பிரமா எல்லா மனிதருடைய நடக்கைகளையும்
எப்படி அறிந்து அவைகளைத் தலையிலே எழு
துவான். அல்லாமலுந் தான் எழுதின விதிய
ன்படி திட்டமாய் நடக்கிறதற்கு எப்படிச்
செய்வான்? ஆதலால் விதியென்றொன்றிருக்கி
றதென்று நீங்கள் சொல்லுகிறதெல்லாம் பொ
ய்யாகவே இருக்கிறதென்பதற்குச் சந்தேகமி
ல்லை.

சத்தியவேதத்திற் சொல்லிய சில திட்டாந்
திரங்களைக் காட்டுவேன். சிந்தியுங்கள். துன்
மார்க்கனே நீ பராபரனுடைய நியாயத்தீர்ப்பு
க்குத் தப்பிப்போகலாமென்று நினைக்கிறாயா?
பராபரன் மிகவுந் தயையாயும் பொறுமை
யாயும் நீடிய சாந்தமாயும் இருக்கிறதைக்குறி
த்து நீ தப்பிதமாய் நினைத்துக்கொண்டு அவ
ருடைய தயை உன் மனந்திருப்புதற்கு ஏதுவா
யிருக்கிறதென்று நினையாமல் உன் இருதயத்
தைக் கடினப்படுத்தி மனந்திரும்பாமல் இரு
க்கிறாய். பராபரனுடைய கோபாக்கினையும்
நீதியுள்ள தீர்ப்பும் வெளிப்படும் நாளிலே உ
ன்னிற் கோபாக்கினை வரும்படி அதை உடந்
தைப்படுத்திக்கொள்ளுகிறாய். அப்பொழுது
அவர் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்க
தாக அவனவனுக்குப் பதில் அளிப்பார். இ
டைவிடாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமை

யையுங் கனத்தையும் அழியாமையையுந் தே டுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காராயிருந்து சத்தியத்துக்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்துக்குக் கீழ்ப்படிகிற வர்களோ உக்கிர கோப ஆக்கினையை அடை வார்கள். பராபரனிடத்திற் பட்சவாரம் இல் லையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. மெ ய்தான். எந்த மனிதன் பொல்லாங்கைச் செ ய்கிறானோ அவனுக்கு உபாதியும் வியாகுலமும் வரும். எவன் நன்மைசெய்கிறானோ அவனு க்கு மகிமையுங் கனமுஞ் சமாதான சவுக்கிய முமுண்டாகும் அதற்குச் சந்தேகமில்லை. நீ ங்கள் இந்த வேதவாக்கியத்தை நம்பினாலும் ந ம்பாமலிருந்தாலும் பராபரன் தாம் வெளிப் படுத்தின வசனத்தின்படி தீர்மானம்பண்ணா மல் விடார். ஆதலால் விதி எழுதியிருக்கிறதெ ன்று இனி நம்பாமலும் போக்குச் சொல்லா மலும் விட்டு அந்த நரக ஆக்கினைக்குத் தப் பி நித்திய சவுக்கியம் அடைந்து கொள்ளும்ப டிக்கு எல்லாத் துன்மார்க்கங்களையும் விட்டு உங்கள் தேவனாகிய பராபரனிடத்துக்கு ம னந்திரும்பி வந்து விடுங்கள். உங்கள் பாவ ங்களுக்காகப் பாடுபட்டு மரணமடைந்து உயி ரோடெழுந்திருந்து உங்களுக்கு நித்திய ஜீவ னைச் சம்பாதிக்கிறவராகிய இயேசுக்கிறிஸ்து இரட்சகரை நம்பாமற் றள்ளுகிறதே எல்லா த் தீமைகளிலும் பிரதானமான தீமையாய் இ ருக்கின்றது. அவர் உங்கள் மேல் வைத்த அ ன்புக்கும் இரக்கத்துக்கும் ஒப்பில்லாமல் இ

ருந்தும் நீங்கள் உங்கள் பொல்லாத் இச்சைகளைவிடாதபடிக்கு அவரைத் தள்ளுகிறீர்கள். அதற்காகப் பராபரன் பிதாவைப்போல இந்த வியாதி முதலான உபாதிகளால் உங்களைத் தண்டிக்கிறார்.

பிரியமானவர்களே இதிற் காட்டியிருக்கிற நியாயங்களினாலே இம்மையில் நமக்கு உண்டாயிருக்கிற இன்ப துன்பங்களெல்லாம் பராபரனுடைய சித்தத்தின்படி வருகிறதேயன்றி வேறொரு பிசாசினாலாகிலும் நீங்கள் சொல்லுகிற தேவர்களாலென்கிலும் வருகிறதல்லவென்றும் பராபரன் இப்படிப்பட்ட துன்பங்களை வரவிடுவது நம்மேற்கொண்ட கிருபையினாலேயன்றி வைராக்கியத்தினாலே அல்லவென்றும் அவர் இந்தத் துன்பங்களினாலே மரணத்தையும் நரக வேதனையையும் மறந்திருக்கிற நமக்கு அவைகளை நினைப்பூட்டி நம்மைக் குணப்படுதலுக்கு அழைக்கிறாரென்றும் அவைகளுக்கு விலக்கி நம்மைக் காத்துக்கொள்ளப் பராபரனே வல்லவரல்லாமல் வேறொருவர் நம்மைக் காக்கக் கூடாதென்றும் நிச்சயித்து நர பாவ நிவாரணராகிய கிறிஸ்துநாதர் வழியாய்ப் பாவப்பொறுதி பெற்றுக்கொண்டு பராபரனிடத்துக்கு அடைக்கலம் புகுந்து இரட்சிக்கப்படுவீர்களாக. அப்பொழுது இம்மையிலே உங்களுக்குண்டாயிருக்கிற கலக்கங்களை நீக்கி ஆறுதலைத் தருவதுமல்லாமல் மறுமையிலேயும் நரக வேதனைக்கு நீங்கலாக்கி மோட்சசந்தோஷத்தையும் அருளிச்செய்வார்.

இப்படியே எல்லாரும் புத்தியும் பத்தியுமுள்ளவர்களாய் நடந்து நன்மை அடைந்துகொள்ளும்படி பராபரன் கிருபை செய்வாராக.

---

௧ மகா இக்கட்டாம் ஆபத்து
உண்டாய் அடியார் மனது
ஓர் யோசனையுமின்றியே
கலங்கிக் கொண்ட பொழுதே.
௨ கத்தாவே மனத் தாழ்மையாய்
உம்மண்டை சேர்ந்து ஏகமாய்
அனுக்கிரகத்தைக் கேட்பதே
அடியார் ஆறுதலாமே.
௩. நொறுங்கிய நெஞ்சுடனே
வாறோம் இரங்கும் கத்தரே
மன்னித்துக்கொள்ளும் மிகவும்
கண்டிப்பாய்த் தண்டியாதிரும்.
௪. இக்கட்டிலே யேசு மூலமாய்
மன்றாடினோரைத்தபவாய்
ரட்சிப்போமென்றுதேவரீர்
நல்வாக்குத்தத்தம்பண்ணினீர்.
௫ ஆ! எங்கள் மீறுதல்களை
பாராமல் இயேசுக்கிறிஸ்துவை
பார்த்தெங்கள் வாதை யாவையும்
அன்பாக நீக்கியருளும்.

முற்றிற்று.